உ

சிவமயம்

 

# கொழுந்துவிடும் கோவிற்கடவை

ஆக்கியோன்:

தவதாமோதரன்

கோவிற்கடவை அறநெறி மன்றம்

துன்னாலை.

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



★ ★ ★

# கொழுந்துவிடும் கோவிற்கடவை

(காலகால கைநூல்)

★ ★ ★


ஆக்கியோன்:- தவதாமோதரன் (வேழமுகஅடிகள்)

கோவிற்கடவை அறநெறி மன்றம்

துன்னாலை.


திகதி: 17-07-1991

# முகவுரை

அன்பர்கள்!

"பெற்றதாயும் பிறந்ததன் பொன்னுடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

சில புதுமைகளும் முன்னேற்றங்களும் உடைய நமது கிராமத்துக்கு ஒரு நூல் வடிவம், தற்காலப் போக்கில் பின் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காகவும், துரிதமான முற்போக்குப் பணிகள் நடந்திருப்பதை உணரவும், மேலும் தொண்டுகள் வளரவும், அவசியம் தேவையென எனது பல்லாண்டு எண்ணங்கள், அதனுல் முக்கியமான விடயங்களை பல நாட்கள் சேகரித்தேன், இது ஒரு கைநூல், இதனை விபரமாக ஆய்வுடன் பிற்காலத்தவர்கள் எழுத முயற்சிக்கலாம். செயல்படுவதே எமது குறிக்கோள்.

மாவிட்டபுர தெல்லிப்பளை குடியேற்றச் சிறப்பும், துன்னுலை சார்ந்த இக் கிராமம், சிங்கை நகர் வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவ தொடர்பும், திருவூஞ்சல் பாய்கப்பல் பாட்டு ஆணித்தர அமைப்பும், சமுகத் தொண்டுகளும் ஆலய முன்னேற்றச் சுடர்களும், வளர வைத்தன கோவிற்கடவையே கல்வி, பொருள், துணிவு, அருள், ஞானம் எல்லாம் உடைத்தாயது. நவீன மறுமலர்ச்சிகளுடன் நாட்டுப் பிரச்சனைகளிலும் எதிர்நீச்சலுடைய எமது கிராமம் வறுமை, பிணி, அழிவு சேதம் முதலியன அதிகவிதம் இல்லாதது இதன் மாண்பு.

மேலும் நாம் முன்னேற, நமது கிராமம் வளர கருத்து வேறுபாடற்ற ஒற்றுமை வேண்டும். பரந்த நோக்குடன் பல பணிகள் தொடர வேண்டும். சினம் தளர்ந்து நால்வகைச் சீர்கள் பெற்று, ஆலயம், நூலகம், இலவச கல்வி நிலையம், இசை இலக்கியம் போன்ற நற்பணிகள் உருவாக்க வேண்டும். செயல் திறனே நம்முடைய அடிப்படைத் தேவையாகும்.

எமது கிராமம் ஏனையநற்கிராமங்களில் ஒன்று. எனது பிறந்த குக் கிராமத்தைச் சிறந்ததெனக் கொண்டு அதன் சிறப்பியல்புகளை நூலாகத் தருகிறேன். இதனை வாசித்தவர்கள் சிறிதேனும் எள்ளமாட்டார்கள். நன்கு விரும்புவார்களென வேழமுகன் பாதக் காணிக்கையாக வைக்கிறேன். வருங்காலம் செவ்வனே அமைக.

இப்படிக்கு

கோவிற்கடவை. **வேழமுக அடிகள்**

# பொருள் அடக்கம்


| விடயம் | பக்கம் |
| --- | --- |
| 1. முகவுரை | |
| 2. கோவிற்கடவை | 1 |
| 3. ஞானசாரியார் கல்லூரி | 6 |
| 4. சித்திவிநாயகர் ஆலயம் | 7 |
| 5. நெடலி வீரபத்திரர் ஆலயம் | 12 |
| 6. நற்றாமரைக்குளம் — கற்குளு | 13 |
| 7. சாமியன் அரசடி ஊறெல்லை ஆலயம் | 14 |
| 8. கோயிற்கடவை சித்திவிநாயகர் பரிபாலன சபை | 18 |
| 9. கோவிற்கடவை சனசமூக நிலையம் | 19 |
| 10. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் | 20 |
| 11. பழம்பெருமை துன்னாலை வாய்ந்த கோயிற்கடவை பிள்ளையார் கோயில் | 24 |
| 12. யார் இந்த தவதாமோதரம் | 26 |

சிவமயம்

# கோவிற்கடவை

## அமைவிடம்

வான்பொய்ப்பினும் தான் பொய்யா வளமுடை வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதி கட்டைவேலி கோவிற் பற்று துன்னாலை தெற்கு சார்ந்த சிறு கிராமம், இக் கிராமமும் ஆலயப் பெயர் மருவியே கோயில் உள்ள ஊரில் குடியேறினர். இத்துன்னாலை பழம் பெரும் பெருமையுடையது. துன்னாலையில் பரவலாக காணப் படும். ஆலயம் சார்ந்த குக்கிராமங்களில் இதுவும் ஒன்று உ + ம் புளியங்கியான், வெல்லிக்கன் தோட்டம், குடவத்தை, முருவில், வல்லியானந்தம், இந்திரம்மன், அல்லையம்பதி, கோவிற்கடவை, குருக் கட்டு, வல்லிபுர ஆழ்வார் ஆலயம், கொட்டிக்கிழுப்பான் முதலியன. இத் துன்னாலையின் மேற்கு ஊரெல்லை ஆலயக்கிராமமாக விளங்குவதும் அணித்தாயதும் கோங்குயர் கோவிற்கடவை, தாமரைக்குளம் பிட்டனி திரு. கதிரேசு வீடு தொடங்கி சாமியன் அரசடி ஊரெல்லை ஞான வைரவர் ஆலயம் மட்டும் விசாலமாய் அமைந்த 350 குடிகள் கொண்ட சிறிய கிராமம், கிராமப் பிரிவுகள் – கொள்வளித்தோட்டம் புளியடி, நெடிலி, தாமரைக்குளம், மித்திலடி, அனிஞ்சிலடி கள்ளியடி என்பன. அம்பம் ஆஸ்பத்திரி வரை கள்ளியடிக் காணிகள் முடக்காடு எல்லை. காலவரையறவில் மதுவின் காரணம் கடன்சுமையால் மணி விலைக்கு சில நன் செய்நிலங்கள் விற்கப்பட்டன. கோவிற்கடவை ஆலயம் மந்திகை கலிகை ஊடறுக்கும் பெருந்தெருவில் துன்னாலை மான்நின்ற காட்டருகில் காட்டுப்புலம் எனும் காணியில் எழுந்தருளி யிருக்கின்றது.

## கிராமத் தோற்றம்

8-ம் நூற்றுண்டில் வட பகுதியைக் கந்தரோடை எனும் கதிர மலையில் உக்கிரமசிங்கன் ஆட்சிபுரியும் காலம் மங்கை வதனம் மாருதப் பிரவல்லியை மணந்து மாவிட்டபுரக் கோயிலும் கட்டினுன். மாவிட்ட புரத்தின் ஆதிப்பெயர் கோவிற்கடவை. இத்துடன் அரசன் தன் மனைவிக்கு பகைவரிடமிருந்து பாதுகாப்பு அரணுக தனது இராச தானியை சில காலம் சிங்கை நகர் எனப்படும் வல்லிபுரத்தில் கோட் டை அமைத்தான். சிங்கை நகர் ஆராய்வுகள் பிற்காலத்தில் செய்யப் பட்டன. கற்றநூல் துணிவு தெளிவு முடிவுகள் மாறுபடுகின்றன.

அடிக்கடி படையெடுப்புகள், கலகங்கள், அந்நியர் வருகை முதலிய காரணங்களால் மக்கள் இடங்கள் பெயரவேண்டி இருந்தனர் யாழ்ப் பாணத்தில் சோழ மண்டலத் தொடர்பும் கர்நாடக தேசத் தொடர் பும் இக் காலகட்டத்தில் குடிகொண்டன. போத்துக்கேயர், ஒல்லாந் தருடைய ஆட்சிக் காலத்தில் மாவிட்டபுரம் தெல்லிப்பளை முதலிய இடங்களிலிருந்து மக்கள் குடியேற்றத்தைப் பல பகுதிகளிலும் மேற் கொண்டனர், ஒருபகுதி மாவிட்டபுரம் மரபின் மேவிய' தொண்டை மண்டலம் காரைக் கோட்டு வேளாளர் மரபும் கொண்ட வேலர் சங்கரர் தோப்பு தர்மசாதனம் காட்டுப்புலம் மேவிய சித்திவிநாயகர் ஆலயக் காணியும் வேலர் சங்கரர் முதன்மைகாட்டி எழுதப்பட்ட நாட்டுக்கோட்டு செட்டி தெல்லிப்பளை மரபின் மேவிய வல்லியார் பெண் கண்ணி தோம்பு பளவளவு தர்மசாதனம் தேரோடும் வீதியும் திருவட ஒழுங்கையும் மறுபகுதியாகவும் சேர்ந்த ஆலயமும், இதனை யடுத்த செகக்கொடி தேவன் குறிச்சியிறை, வீரசுந்தரமுதலி குறிச்சி யிறைக் காணிகளிலும் மக்கள் குடியேறினர்கள். குடியேறவேண்டிய காரணங்கள் சேரிஒழிப்பு, குடியேற்றத்திட்டம், மதகண்டனம் கலவரங் களாகும். இக் குறிச்சி முதலிகளும் சுடலை அருகே வாழ்ந்தனர், குடியேறிய காலத்தில் கோலோலை எனப்பெயரிட்டனர்.

ஆகவே கோலோலை, கொக்கருமுல்லை கோவிற்கடவையாக தற்காலத்தில் வழங்கலாயிற்று ஆதியில் 7 குடிகள் மட்டும் இருந்தன. அவர்களின் இனப்பெருக்கமே இன்றைய ஒரே கொடியான 350 குடி மக்கள்.

## இக்கிராம எல்லைகள்

வடக்கு — கொட்டடித்தோட்டம்
கிழக்கு — துன்னாலை
தெற்கு — கலிகை பிரதான வீதி
மேற்கு — முடக்காடு சாமியன் அரசடி வைரவர் ஆலயம்

## கிராமச் சூழ்நிலையும் வருவாயும் முத்தமிழ் வளர்ச்சியும்

வற்றாதநீர்வளம், செம்மண் நிலவளம், கனிமரங்கள் கற்பக தருக்கள் உடையன. நவீன நகர் இயல்பு, ஞானசாரியக் கல்லூரி, காசிநாதர் மகா வித்தியாலயம், மயானம், கூட்டுறவுச் சங்கம், நூல் நிலையம், நற்றாமரைத் தடாகம், ஆஸ்பத்திரி, கைத்தொழில் நிலையம், அரிசி ஆலைகள், மளிகைக் கடைகள் உள்ளடக்கி அமையப் பெற்றன.

முக்கிய வருமானங்கள் விவசாயம், வியாபாரம், உத்தியோகம், வெளிநாட்டுச் செலவாணி முதலியன, பட்டதாரிக் கல்வியில் ஆர்வமும் இசைத்துறையில் ஊக்கமும் அரசியல் தெளிவும் உடையர். ஆலய பரிபாலன சபை, அறநெறி மன்றம் கமநலசேவை சனசமூக நிலையம் பெரும் பங்கு தொண்டுகளைப் புரிகின்றன.

பட்டதாரிக் கல்வி 1989 மதிப்பீடு ஆண்கள் 30 பெண்கள் 10

தமிழ் பண்டிதர்கள் – காலஞ்சென்ற திரு இ. சின்னையா,
திரு. ச. சுப்பையா, திரு. க. முருகேசு

நாடகத்துறை முதிய கலைஞர்கள் – திரு. ஆ. சிதம்பரப்பிள்ளை,
திரு ஆ. மகாலிங்கம், திரு. வ. மார்க்கண்டு,
திரு அனசிமா பொன்னையா, கரகம் கந்தசாமி

காலஞ்சென்ற திரு. அண்ணாவி இராமு, திரு. வே. இராமலிங்கம்,
திரு. க. கணபதிப்பிள்ளை
திரு. சி. க ஆழ்வார், திரு. அழகுசின்னத்தம்பி

## நடைபெற்ற நாடகங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | கண்டியரசன் | 8 | வள்ளிதிருமணம் |
| 2 | அரிச்சந்திரா | 9 | மார்க்கண்டேயர் |
| 3 | அல்லிஇராணி | 10 | மாணிக்கவாசகர் |
| 4 | பவளக்கொடி | 11 | கோவலன் கண்ணகி |
| 5 | திரௌபதைதுகில் | 12 | இராம பட்டாபிஷேகம் |
| 6 | நல்லதங்காள் | 13 | விஸ்வாமித்திரர் மேனகா |
| 7 | நளதமயந்தி | 14 | காத்தவராயன் |

**மிருதங்க அரங்கேற்றம்** தீர்த்தோற்சவம் 1990 திருமதி திருப்பதி பேரன் திருவளர் செல்வன் மரியதாஸ்

**சமயம்** பஜனை கூட்டுவழிபாடு
புராண படனம் செய்தல்
கதாப்பிரசங்கம், சிறப்புக் கலைஞரை கௌரவித்தல் நூல்கள் வெளியிடுதல், ஆலய சேவை

**இசை** 1987–ம் ஆண்டு தொடக்கம் மாணவர்கள் சங்கீதம், வயலின், வீணை, மிருதங்கம் ஆர்மோனியம் மெலோடிக்கா முதலியன பழகி விசேட சித்திகளும் பெறுகின்றார்கள்

**கிராமத்தில் விளையும் முக்கிய பயிர்கள்**

நெல், புகையிலை, கிழங்கு, வெங்காயம், காய்கறிவகை, மிளகாய், வாழை, உழுந்து, எள், சாமி, தினை முதலியன.

**கிராம மக்களின் கொள்கை**

ஒன்றுபடல், தொண்டுணர்வு, விடா முயற்சி, ஒற்றுமை உயர்கல்வி ஊக்கம், அடக்கம், சமய ஆர்வம், இனக்கட்டுக் கோப்பு முதலியன. கருத்துக்கள் வேறு பட்டாலும் நல்ல முடிவில் அமையும்.

**கிராம முன்னேற்றச் சுடர்கள்**

1. கற்றோர் பரிபாலனசபை நிர்வாகம்
2. நிகழ்ச்சிகள் வீடியோ படமெடுத்தல்
3. நிகழ்ச்சிகள் விளம்பரம் செய்தல், பத்திரிகைகளும் அடங்கும்
4. சிற்பம், சங்கீத இசைக் கலைஞர்களைக் கௌரவித்தல்
5. வானொலிபுகழ் அறிஞர்கள் சொற் பொழிவுகள் வழங்கல்
6. புதுவருடப் பொங்கல் செய்தல்
7. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுவழி பாடு, பிரசங்கம் செய்தல்
8. புராணப்படன உரையாளரை ஊக்கு வித்தல்

**இக் கிராமச் சிறப்புக்கள்**

1. ஷெல் தகரா கிராமங்களில் ஒன்று
2. இளைஞர்களின் முக்கிய கூட்டுப் பங்களிப்பு
3. கற்குளு நற்றமரைத் தடாகம்
4. அரசியல் சேவை, கிராமோதயத் தொண்டுகள்
5. கல்வெட்டு இயற்றல்
6. நிலபுலன்களை அழியாது பேணல், இயன்ற தர்மம் செய்தல்
7. வருடாந்தம் எமது ஆலய மாசிமாத மகோற்சவம் தொடங்கி புரட்டாதி மாதம் துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய 17-ம் திருவிழா கேணித்தீர்த்தம் (பட்டு) கொடியிறக்கல் முடிவு பெறுதல் பல்லாண்டு மரபு

8. திருவூஞ்சலில் விசேடமான பாய்க்கப்பல் பாட்டு
9. அயல் கிராம மக்களுடன் ஒற்றுமை, உதவி பேணல்
10. இன்னு செய்தாரை அவர் நாண நன்னயம் செய்துவிடல்
11. காலம் தவறுத சமயப் பணிகள் செய்தல்
12. வெளிநாட்டுச் செலவாணிகளில் திருப்பணிகள் செய்தல்
13. சாமியன் அரசடி வைரவர் ஆலய மிருக யாத்திரை செய்தல்

## கிராம அமைதியின்மை நாட்கள்

1. குடியேறிய முற்காலங்களில் 1880-ம் ஆண்டின் முற்பகுதி வறுமை பண்டமாற்று முறை. பணத்தட்டுப்பாடு, அறியாமைப் பாவ செயல்கள் கொலை, மது, களவு, மாந்திரீகம் முதலியன வதைத்தன.

2. 1969 — 1976 வரை கோவியப் பிரச்சனை, தீண்டாமைப் பிரச்சனைகள் தோன்றித் தோல்வியடைந்தன.

3. 27-6-83-ல் சிங்களவர் — தமிழர் இனக்கலவரம் முதுமையடைந்தது 1956-ல் தொடங்கி 1983-ல் உச்சநிலையடைந்த நாட்கள்.

4. 1986 — 1990 வரை இலங்கை இராணுவம் தமிழ் பிரதேசங்களை தரையிலும் வானிலும் கடலிலும் விடுதலை இயக்கங்களுக்கு எதிராகத் தாக்கல்களை நடத்திக் கொண்டேயிருந்தன. வடமராட்சி மக்கள் உணவுத்தட்டுப்பாடு, விலையுயர்வு, வீடுகள் கடைகள், கட்டிட சேதங்கள், கல்விச்சீரழிவு, பிரயாணச்சீர்கேடு, வருமான வீழ்ச்சி, அகதிவாழ்வு, மட்டுப்படுத்தப்பட்ட அத்தியாவசிய சேவைகள், முதலியவற்றுல் மக்கள் துன்புற்ற நாட்கள் அரசியல் இன்னல்கள் இன்னும் ஒயவில்லை.

5. 29-7-87-ல் இந்திய அமைதிகாக்கும் படையும் சமாதான உடன்பாடு மேற்கொண்டும் பல கொடூரங்களின் பின் வாபஸ்பெறப்பட்டது,

6. போர்கள் நடக்கின்ற நாட்களில் அரசியல் செயலிழந்த காலம்

7. ஒய்வு பெற்றவர்களும், வேலையின்மை, சம்பளமின்மை, வங்கி வழப்பின்மை, வியாபாரமின்மை, அரசாங்க வேலைகள் நடைபெருமைமுதலிய சீர்கேடுகள் கஸ்டங்கள் உடைய கிழமைகள் மாதங்கள்.

## ஞானசாரியக் கல்லூரிக் கல்வி

இக் கல்லூரி ஆரம்ப காலத்தில் எமது இனங்களின் காணிகள் நன்கொடையாக்கப்பட்டன. திரு. சு. சிவசுப்பிரமணியம் தனது தந்தை பெயரில் சுப்பையா மண்டபவாசிகசாலையும் கட்டினர். எமது கிராம ஆசிரியர்கள் தொன்று தொட்டு கற்பித்தும், மாணவர்கள் கல்விகற்றும், வருகின்றனர். ஆனல் அன்றய திரு. ஆழ்வாப்பிள்ளை ஆசிரியர் தொடங்கி இன்றுவரையிலும் எமது கிராம ஆசிரிய நியமனங்களில், மாணவர்கள் தொடர்ந்து உயர்கல்வி பயிலமுடியாத நிலைகள் போன்ற விடயங்களில், கல்லூரி அதிபர்களும் நிர்வாகக் குழுவும் பாகுபாடுகள் பொறுமைகள் நிகழ்வது மிகவும் வருந்தத்தக்கதும், கல்விக் களங்கமும் அவமானமும் அல்லவா. உறவாடினலும் உள்ளங்கள் கொதிக்கின்றன. அயலாக இருந்தும் புறக்கணிக்கலாமா? நிர்வாகக் கமிட்டி இதனைப் பரிசிலனை செய்து ஒற்றுமையைப் பேண வேண்டும், எமது ஆசிரியர்கள் மாணவர்கள் பல கஸ்டங்களுடன் ஏன் வேறு பாடசாலைகளுக்கு ஒடுவான்? இக் கல்லூரிக் கட்டிடம் காணிகள் நன்கொடைகள் தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை. பாரபட்சம் மேலும் வேண்டாம். நசித்தவர்கள் என்றுமே வாழ்ந்ததில்லை, ஆராய்ந்து பாருங்கள்.

இப் பாடசாலை அதிபர்கள் பாடசாலைகளில் இன உறவு சிநேகித பாரபட்சமின்றி நிர்வாக அதிகாரப் பரவலாக்கலில் ஊக்கம், கண்டித்தல், செயல்படல், வலுவடையவேண்டும். உயர்ந்த சம்பளம் ஊரோடு பெற்றும் ஆசிரியர்கள் மாணவர்களில் அக்கறையில்லாவிட்டால் பரிபாலனச் சீர்கேடே. கப்பம் கொடுத்து ஆசிரியர் வேலை எடுத்தவர்கள் உயர் வகுப்புகள் நடத்தப் போதிய அறிவு இராது. உதவி புரிதல் விட்டு நல்லாசிரியர்கள் நியமிக்க வேண்டும். மாணவர்கள் ரீயூசனே வேறு பாடசாலையோ தாமாகப் போகாத நிலைவந்து, புள்ளிகள், திறமை முடிவுகள் பெற்று பாடசாலை உயரவேண்டாமா? யாவரும் முன்னேற்றப் பாடுபடுவோமாக. கிராவலை கோவிற்கடவை இணைந்து செயலில் முன்னேறவேண்டும் இரு கிராம மக்களும் விவாகம், தோட்டம், மயானம், காணிகள், இன உறவு, விநாயக ஆலயம், தொழில் உதவி யாவற்றுலும் ஒன்றுபட்ட உள்ளங்கள்.

# சித்திவிநாயகர் ஆலயம்

## ஆலய வரலாறு

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் குடியேறிய மக்கள் கோலோலே என்னும் மாதிரிக் கிராமம் ஆக்கி அப்பெயரும் இட்டனர். மாவிட்டபுரம் தெல்லிப்பளை சேரிஒழிப்பு மதகண்டனம் உள்நாட்டுக் கலவரங்கள், அரசுப் போர்கள் காரணமாக கீழ்த்திசை நோக்கி இடங்கள் பெயர்ந்தனர். துன்பம் துடைக்க வழியும், திருவருள் கூட்டும், தெய்வப்பயமும், மந்திரம், வசியம், சூனியம், பேய் முதலியன விரட்டவும், பயிர் விருத்தியும் செல்வமும் ஓங்க பாதுகாப்பு அரணாக, பெரிய வில்வமர வெள்ளரலிப்பற்றைக்குக் கீழ் சிறு கல்லுப் பிள்ளையாரை வைத்து வணங்கி வந்தார்கள். பண்டமாற்று முறைக் காலங்கள் கல்வியறிவு இல்லாத காலம்.

இக் காலத்தில் ஒரு வெள்ளைப் பிரதானி தனது முதலிகளிடம் திறைகள் விளைவிப் போகும் நேரத்தில் இவ்விடம் காடானபடியால் ஓர்நாள் வேட்டையாட நினைத்தான். ஊன்பசிதொடர உயிர்கொலை செய்ய எண்ணினான். செகக்கொடிதேவன் குறிச்சியிறை நோக்கினான். அடர்ந்த முல்லைவனமாகிய காட்டுப் புலத்தை யடைந்தான். மிகவும் வறட்சியுற்ற காலம் மானின்ற காட்டில் மான், மரை, பன்றி போன்ற மிருகங்கள் அகப்படாமையால் பறவைகளைத் தேடினான். ஓங்கி வளர்ந்த வில்வ விருட்சம், நெருக்கிய வெள்ளரலிப்பற்றை, வில்வமரக்கிளையின் மேல் வில்லியம் இனமென வெண்கொக்கு சிறகு உதிர்ப்பதைக் கண்டான். வெய்யோன் வெம்மை தாங்க முடியவில்லை முழுச்சிரமத்துடன் கன்மவினைதொடர மனவினையை இலக்காக தன் கையமர்ந்த துவக்கினால் பதுங்கியே குறிதவறாது சுட்டான். இலக்குகள்தவறி வெண்கொக்கு வட்டமிட்டது. மனம் தளர்ந்தநிலையில் அலரிப் பற்றைக்குக் கீழே பார்த்தான் கல்லாத பேருக்கும் கருணை காட்டும் கல்லினைக் கண்டான். நாலு புட்பங்கள் சாத்தப்பட்டிருந்தன. இதைக் கண்டு சிதறி ஓடிய மக்களை அழைத்து விசாரித்தான். கடவுள் ''கோட்'' என்பதை அறிந்தான் கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா என்றார்கள். வெள்ளையன் தானாகவே போய்விட்டான். இதனால் கொக்கறு முல்லைவனப் பிள்ளையாராயிற்று. கொக்கறுமூலைக் கிராமப் பெயராயிற்று.

1800–ம் ஆண்டளவில் வீமன் சின்னையா சின்னத்தம்பி என்பவரின் அதிதீவிர முயற்சியினால் பொன்னும் பொருளும் புகையிலையும் சேர்த்து வருமானமாக்கி மக்களின் முழு ஆதரவுடன் ஒற்றுமையாக தோள்கள் சுமந்து தனிக்கல் தீராந்திகள் கொண்டு ஆவி அலறக் கட்டி யெழுப்பிய பிரமாண்டமான ஆலயமே கோவிற்கடவை. ஆதிக் குடியேற்ற மூல காரணப் பெயரை கோவிற்கடவையென இட்டனர். மாவிட்டபுர மல்லாக நெல்லிப்பழை விவாகத் தொடர்கள் இன்றும் உண்டு. சிதம்பரம் யாத்திரை செய்யும் மரபும் உண்டு. இன்றும் வெண்கொக்கு வெண்புறு வெண்ராஜநாகம் உலாவி வரும் ஆலயப் பூங்கொல்லையாகும் திருவீமன் சி. சின்னத்தம்பியாரின் புகைப்படம் கிடைக்கவில்லை. யாவரும் போற்றவேண்டிய மகான் இவரேயாகும்.

## ஆலய அமைவிடம்

இவ்வாலயத்தின் நில அளவைப்படம் விரைவில் தயாரிக்கப்படும். மேலும் பல தேவைகளுக்கு உதவலாம்.

அ) காணிப்பெயர் — காட்டுப்புலம் — ஆதினக்குடியேற்றம் விநாயக வழிபாடு.

ஆ) ஆலயப்பெயர் — கொக்கருமுல்லைவனம் — வேழமுகன் மகிமை

இ) கிராமம் — கோலோலை, கொக்கருமூலை

ஈ) 1800–ல் திரிபடைந்த பெயர் — கோவிற்கடவை — மாவிட்டபுர மரபு. கோ + இல் + கடவை — ஆன்மா பாசம் நீங்கிப் பதியைத் தேடும் இடம். ஆலயக் கட்டியங்களில் திருவூஞ்சலில் இவைகளைப் பகுத்தறியலாம்.

இவ்வாலய மூலட்டானேசுவரர் சித்திவிநாயகர், பரிவார உற்சவ மூர்த்திகள் வீரபத்திரர் முருகன், உட்பிரகார மூர்த்திகள் நாகதம்பிரான் முருகன் வைரவர் சண்டேசுவரர், தேவசபை நந்தி பலிபீடம் கொடிமரம் தீர்த்தக் கிணறு பூங்கொல்லை உண்டு.

## சாலைகள்

ஆறு ஆதாரமண்டபங்கள், வசந்தம், யாகம், களஞ்சியம் மடப்பள்ளி திருமடம் இராசகோபுர அத்திவாரம், ஒலி பெருக்கி அறை வாகன சாலை, அன்னதான பூமி, தேர் சப்பறக் கொட்டகைகள், நூல்நிலையம் என்பன.

இரு ஆவண வீதிகள் உள. வெளிவீதி ஐங்கோண வடிவத்தில் உண்டு. பாசறைபோல் முக்கோணமாய் அமைந்த ஆலயம் மாண்புடையது. மிகவும் நீளமும் விசாலமானதும் ஆகும். முகவாயில் விருட்சங்கள் வெளிக்கிணறுடன் இத்திமரம். வேம்பும் வில்வமும் மருதும் காலப் போக்கில் தறிக்கப்பட்டன. இவ்வாலய முன்புறத் தீர்த்தக்கேணி திரு. கா. ஆறுமுகஐயரால் தூர்க்கப்பட்டு தோட்டமாக்கப்பட்டது. பதிலாக கற்குளு நற்தாமரைத் தடாகம் பாவிக்கப்படுகின்றது. தாமரைத் தடாகத் திருமடம் திரு. ஆ. வல்லிபுர ஆசிரியரால் திரு. வ. மார்க்கண்டு ஆசிரியருடன் வழக்காடி வென்று அழிக்கப்பட்டது. இவ் திரு. வ. மார்க்கண்டு ஆசிரியர் 7-ம் திருவிழா பல வருடங்கள் தனியச் செய்த புண்ணியவானும் நாடக விற்பன்னரும் மக்களுடன் ஒன்றிணைந்தவருமாவர். இவ் வாலயப் பூசகர்கள் திரு. மூத்தையர் பொன்னம்மாவின் மரபினரே.

இவ்வாலயம் தன்னகத்தே நன்மனைகள், பனங்காணிகள் தோட்டங்கள் வயல்கள் முதலியன சூழலாகக் கொண்டுள்ளது. நீர்வளம் நிலவளங்கள் கொண்ட பூமியாகும். மிருகங்கள் பறவைகள் உல்லாசமாக வாழும் இடமாகும்.

## இவ் வாலயச் சிறப்புக்கள்

1. முக்கோண வடிவில் ஐங்கோணத் தெருவுள்ள வெளிவீதி.
2. திருவூஞ்சலில் அரிதாகக் காணப்படும் பாய்க்கப்பல் பாட்டு துறைமுகச் சமீபம், துன்னாலை சார்ந்த சிங்கை நகர் சமீபம் முதலியன வெளிப்படுத்தும், மரங்கள், கற்கள் துறைமுக மூலமாகக் கொணரப்பட்டதாம்.
3. திருவீமன் சின்னையா சின்னத்தம்பி காலத்தில் போட்ட இராச கோபுர அத்திவாரம்.
4. மான் வேட்டை யாடல் உ[illegible]ரெல்லை சாமியன் அரசடி ஞான வைரவர் ஆலயம்.
5. தீர்த்தமாடல் கற்குளுத் தாமரைத் தடாகம்.
6. 1987-ல் செலியிலிருந்து போட்ட குண்டுகள் சிதறு சின்னமாயின
7. கிரமம் தவறாத விழாக்கள், புராணப்படன விரிவுரைகள்.
8. சித்திவிநாயகர் பஜனைமலர், சுற்றுலாக் களிப்பு வெளியிடல்.
9. முக்கிய பணிகள் ஆண்டறிக்கைகளில் காணலாம்.
10. முக்கிய பிரசுரங்கள் வீரகேசரி, உதயன், முரசொலிப் பத்திரிகைகளில் வெளியிடல்.
11. ஆலய உற்சவச் சிறப்பு 1989-ம் ஆண்டு மகோற்சவ விளம்பரத்தில் காணலாம்.

## ஆலயத்தில் முக்கிய விடயங்கள்

1. திருப்பணிப் பணம் தொண்டுகளுக்கே செலவழித்தல்
2. புராணப்படனம் உரைகளுக்கு காசு வாங்கும் வழக்கம் இல்லை
3. திட்டத்துக்கு மேலாக எதுவித செலவுகளும் வருவதில்லை
4. பரிபாலன சபையில், கற்றவர்களும், நிகழ்ச்சிகளை வைக்கும் தன்மையும், ஆலயக்கிரம வரவும், புராணங்களைச் செயல்படுத்துபவர்களும், தூய்மையும், மதிப்பும், நேர்மை, கடமை கட்டுப்பாடும், ஆலயப் பொருட்களைப் பராமரிப்பவரும், இலக்கிய சமய, அறிவுடையவரும் நிர்வாகத்தில் இருத்தல் வேண்டும்.
5. யாவருடைய மனதையும் கவர்ந்து ஒற்றுமையைப் பேணவேண்டும்

## சித்திவிநாயகர் செய்த அற்புதங்கள்

1. தெற்கு வாசலுடன் தேசாந்த செலவாணி வருதல்
2. விடுதலை இயக்கமுடன், வீரர் உயர்கல்வி அடைதல்,
3. குண்டுகள் தகராமை, கிராமப்பஞ்ச அழிவின்மை
4. இளைஞர்களின் நல்ல பண்புகள், கூட்டுறவு, பக்திவலிமை
5. கிரியைகள் தவறாது நடத்தல், உத்தியோக வாய்ப்புகள்
6. பிரயாணப் பாதுகாப்பு, தனிப்பட்ட உதவிகள், கனவிலும் காட்டல்
7. மங்கையர்கள் வரவும் சங்கீத லயமும் அளித்தல்
8. நீர்நிலவளம் கொடுத்தல், மக்கள் பணி உள்ளம் கொளல்
9. இந்தியா சுற்றுப் பிரயாண யாத்திரை செய்தல்
10. தன்னகத்தே சிலரைச் செயற்பட வைத்தல்.

## ஆலயப் பூங்கொல்லை

1977-ம் ஆண்டு பரிபாலன சபை பூங்கொல்லையைப் பராமரிக்கத் தொடங்கியது. சபையின் தீர்மானப்படி குத்தகை எடுத்தவர்கள் குணம் கொண்டு பார்க்கவில்லை. சுற்றுமதில், மோட்டோர் பதித்த நீர்த்தொட்டிக் குழாய்கள், வருமானப் பயிர்கள், பூமரங்கள் காலா காலம் நாட்டப்பட்டும் நல்ல பலன்கள் அழிக்கவில்லை. தொடர்ந்து யாருமே செய்ததில்லை. ஆண்டறிக்கைகளில் காணலாம். இதனால் 1990-ம் ஆண்டு ஆலயப் பூசகரிடம் கையளிக்கப்பட்டது. வருமானப் பயிர்களும் பூமரங்களும் நிரந்தரமானதாக கணக்கெடுக்க முடியவில்லை, பராமரிப்பில் பொறுத்திருக்கிறது. அழகான நந்தவனம் அத்திமர நிழலுடன் அன்னதான பூமிக்கருகில் பொலிவுறுகின்றது. இப் பூங்கொல்லையில் புதிதாக பூமரங்கள் தென்னைகள் கமுகமரங்கள்

அன்பளிப்புச் செய்தவர்கள் திரு. ஆ. மகாலிங்கமும் அவரது மைத்துணர் திரு. ஆ. சிவபாதசுந்தரமுமே திரு. விசுவர் பொன்னையா செங்கழுநீர் தடாகம் அமைத்த பெரியார்.

## ஆலயம் சார்ந்த இளைஞர்கள்

1976-ம் ஆண்டு தொடங்கி இன்று வரையும் இவ் விளைஞர்கள் ஆலயப்பணி நூலகப்பணி யாவற்றிலும் முன்னின்று ஒற்றுமையாக பல உதவிகள் புரிகின்றார்கள். இவர்களிடம் கல்வி ஆர்வம், நல்லொழுக்கம், கடினஉழைப்பு தர்மசிந்தனைகள், போன்ற உயர்ந்த பண்புகளைக் காணலாம். தற்கால ரீதியில் காண்பது அரிது யாமெல்லாம் இவர்களுக்கு தனிமையான கௌரவம் பாராட்டு கொடுக்க வேண்டியவர்களானோம். பெரியோர்களாகிய நாம் சில தீய செயல்களினால் தலை குனிய வேண்டியிருக்கிறது.

ஆலயப்பணி, நூலகப்பணி பணம் முழுவதும் வெளிநாட்டு இளைஞர்களின் செலவாணியே. இவர்களின் மூலதனம் கொண்டபணிகளை ஆண்டறிக்கைகளில் காணலாம். மேலும் பணிகள் மேற்கொள்ள அரசியல் சூழ்நிலை சரியாக இல்லாத காரணத்தால் அதிக பாதிப்புகளை அடைகின்றன ஆலயப்பணி திரு. இ. வீரவாகு கனிஸ்ட அதிபர் தலைமையின் கீழ் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆர்வமுடன் ஆலயம் நடாத்துகிறார். இளைஞர்களின் துணைப்பலமே மூலகாரணமாகும்

## சித்திவிநாயகர் ஆலய வழமை

| | |
|---|---|
| கிரியைகள் | — திரு. கா. சிதம்பரநடராஜக் குருக்கள்<br>திரு. ஆ. கணேசசர்மாக் குருக்கள் |
| வருமானம் | — திருவிழாத் திட்டம் உபயக் கொடுப்பனவு பூங்கொல்லை. |
| தை மாதம் | — தைப்பொங்கல், மணவாளக்கோலம் |
| மாசி | — மகோற்சவம் 10 நாட்கள் – விளக்கம் விளம்பரத்தில் உண்டு. |
| சித்திரை | — புதுவருடப் பொங்கல் |
| வைகாசி<br>ஆனி ஆடி | — கந்தபுராண படனம் முழுவதும், அன்னதானம் |
| ஆவணி | — விநாய சதுர்த்திப் பெருவிழா |
| புரட்டாதி | — வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தீர்த்தோற்சவம் (17-ம் திருவிழா) நவராத்திரி – காவடி எடுத்தல் |

ஐப்பசி — கந்தஷட்டி 6 நாள் யுத்தகாண்டப்படனம் சூரபன்மன் வதைப்படலம் முடியவும், சூரன்போர் விழா. மறு நாள் தேவகாண்டப்படனம் முழுவதும்.

கார்த்திகை — சர்வாலய தீபம்

மார்கழி — பிள்ளையார் நோன்பு - 21 நாட்கள்
பிள்ளையார் கதை படித்தல்
திருவாதிரை விரதம் - 10 நாட்கள்
சுப்பிரபாதம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை
திருவாதவூரடிகள் புராணப்படனம் முழுவதும்.

விசேட பாராயணங்கள்

திருமுறைகள்
திருப்பொற்சுண்ணம்
அறுபடை வீடுகவசம்
விநாயகரகவல்
பஜனை சிவபுராணம்
சுற்றுலா ஆனந்தக்களிப்பு
திருவூஞ்சல் பாட்டு
நாராயண பஜனைமலர்

# நெடலி வீரபத்திர ஆலயம்

ஆதியில் திரு. சுப்பர் பொன்னையா வளவில் வேம்பின் கீழ் பராமரித்து காவல் தெய்வமாக இருந்தது. இதற்கு வல்லியார் முருகேசு தோய்பென்றும் இலகுமூலை பதிராயன்சீமா காணிகளில் பிற் காலத்தில் எழுந்தருளிவிக்கப்பட்டது. இதுவரை இதன் சாதனங்கள் வெளிவரவில்லை. இது ஒரு மடஆலயம் திரு க. வேலுப்பிள்ளையும் அவரது சகோதரங்களும் பராமரித்து வந்தனர். சூலமே அநாதிச் சிலையாகும். ஆண்சந்ததியினர் பிள்ளைகளற்றுப் போக பெண் சந்ததியினர் 1977-ம் ஆண்டு பாரமெடுத்தனர். 22-8-81-ல் திரு. க. வேலாயுதம், திரு. ஆ. சிதம்பரப்பிள்ளை அவர்களின் அதிக முயற்சியினுல் சுற்கோயில் இரு மண்டபமுடன் அமைத்து சிலையமைத்து சிவாகம விதிப்படி கும்பாவிஷேகம் நடைபெற்றது. திரு. பொ. சிவலிங்கம் திருவாசி அன்பளித்தார். வருங்காலத்தில் இதன் பரப்பளவை அளவையாளர் கொண்டு படம் எடுக்கலாம் ஆலயத்துடன் தீர்த்தக்கிணறு ஒரு வீதி பொங்கல் இடம் முகவாயில் கொண்டுள்ளது. மேலதிக நிலங்களை வரையறவு செய்யலாம். இவ்வாலயம் பெருப்பிக்க முடியாது.

முக்கிய தினங்கள் அ. சித்திர பூரணைக் கஞ்சிவிரதம் சித்திரபுத்திர நயினர் பசுவின் கதைபடித்தல்

ஆ. கும்பாவிஷேக தினமடை அபிஷேகம்

இ. விநாயகர் தீர்த்தோற்சவ உலா உபயம்

கோவிற்கடவை சித்திவிநாயக ஆலய பூசகரே இதனைச் செய்வார். வீரபத்திர விக்கிரகம் பிள்ளையார் ஆலயத்தில் எழுந்தருளப் பெற்றதால் இங்கு பழைய முறைப்படி சிறுமடாலயமாக்கி கருமங்கள் குறைவுபெற்றன. சிறிய ஆலயத்தின் சீரிய சேவைகள் தொடரட்டும் அல்லது கைவிடப்படலாம். மக்கள் மனநிலையைப் பொறுத்ததுவே, என்னுடன் ஆண்பாவச் சந்ததி அழிகின்றது. இதுவே பிறவிப் பெருங் கொடை, என்னைக் கடைசிக்காலம் வேழமுகனின் அடிகளாக்கி விட்டார்.

## நற்தாமரைக்குளம்--கற்குளு

வேழமுகன் ஆண்டுக் கொருமுறை பிள்ளையார் கதை, கந்த ஷட்டி காப்புகள் போடவும், மாசி மகோற்சவத் தீர்த்தோற்சவ நீராடவும் பாவிக்கப்படுகின்றது. சுற்றுடல் மக்கள் குளிக்கவும் நீர்ப்பாசன தேவைக்கும் உதவுகின்றது. இயற்கையாக அமைந்த குளத்தை ஆழமாகத் தோண்டியவர்கள் ஆலயப்பெரியோர் தீர்த்தோற்சவ ஊர்வலம் விளம்பரங்களில் காணலாம். வருடமுழுவதும் வற்றாத நீர் உண்டு. இயற்கைத் தென்றல் அள்ளிவீசும் மருதமலர்ச் சோலை, செவ்வரலி மலர்கள் செந்நெல் வயல்கள், நாரைகள், தாமரைகள், ஆவினங்கள், பாடும் மீன்கள், நீச்சல் மேனிகள், பசலைப்பாசிகள், பாறுகள் புள்ளினங்கள் வண்டுகள் எங்கணும் அழகுறு காட்சிநல்கும். வேழமுகன் தீர்த்தமாடி மக்களின் குசலம் விசாரித்தலும் பூரண கும்ப இளைப் பாறலும் மங்கல வாத்தியமுடன் ஆலயம் திரும்புவதும் கண்கொள்ளா காட்சியாகும்.

### திருமடம்

இது அழிக்கப்பட்டதினால் தற்பொழுது மருதமரத் தடியில் பந்தல் போட்டு நடத்தப்படுகின்றது. மடைபரவி தேறுதல் நைவேத்திய ஆராதனைகள் நடைபெறும். கடையடியே பழைய திருமடமாகும். குளத்தருகே ஊரொழுங்கை ஊடறுக்கின்றது. திரு. இ. சின்னையா பண்டிதர் அவர்களின் ஆரம்ப முயற்சியே தெருவாகிய காரணமாகும்.

## குளத்தடி வைரவர் ஆலயம்

இது சிறு ஆலயம் மந்திர வேதனைகளால் அயல் மக்கள் தாக்கப் படாமல் பாதுகாக்கச் சூலம்வைத்து கும்பிட்டனர். செய்வினை, சூனி யம், ஏவல், மருந்து என்பன ஆதியில் இனங்களை அநியாயப் படுத் திற்று, தனிப்பட்ட உரிமை ஆலயங்களில் வைரவ ஆலயமும் ஒன்று பிள்ளையார் கோவிலுக்கும் இவைக்கும் எதுவித தொடர்பும் இன்று மட்டும் இல்லை. இனிமேல் ஏற்படலாம். தீர்த்தமாடி சுற்றுலா வர ஆறுதல் பூசை இடம்பெறும் 1980-ம் ஆண்டின் முன் பல காலமாக வேம்பும் இலவமும் கிராஞ்சியும் கொடிகளும் அலரிகளும் சூ ழ் ந் த கொட்டகையில் ஆதரித்தனர். இக் கோயில் பூசகர் துன்னாலை திரு. சபாரத்தினக்குருக்கள் மரபினரே. இதனைத் தந்தையின் பராமரிப்பு மரபினைக்கண்டு 1985-ல் கற்கோவில் அமைத்தவர் திரு. சு. சிவசுப்பிர மணியம் அவர்கள். கும்பாபிஷேகம் நடாத்த காலச் சூழ்நிலைகள் சரிவர வில்லை, இவரின் சில தர்மவிடைய செயல் திறன்களை நாம் போற்ற வேண்டியவர்களானோம். போதியளவு செய்திட்டார். இவ் வைரவர் ஆலயம் செய்வினைப் பேய்களைக் கட்டுமிடமாகும்.

## சாமியன் அரசடி ஊரெல்லை ஞானவைரவர் ஆலயம் வரலாறு

அம்பன் ஆஸ்பத்திரி முடக்காடு வரை பரவியிருந்த கோ வி ற் கடவைக் கள்ளியடி மக்கள் இதனை ஊரெல்லையாக வை த் த ன ர். காலகதியில் கடன் சுமைகளால் சில காணிகளை விற்றனர். ஆதியில் அம்பலவர் ஆழ்வாப்பிள்ளை (பூசாரி ஆழ்வார்) தோ ம் பு ட ன் தனிப் பட்ட ஊரெல்லைக் காவல் தெய்வமாக சூலமும் கல்லும் வை த் து கதிரையிற்புலம் என்னும் தனது சொந்தமான காணியில் வேம்பின் கீழ் மடாலயமாக அவரே பூசைகள் செய்து ஆதரிக்கப்ப ட் டு வ ந் த து. இதன் ஆதி தர்மசாதனம் இவர்களிடம் உண்டு. இவரின் சந்ததியார் திரு. ஆ. வேலுப்பிள்ளை, ஆ. வல்லிபுரம் திரு. வ. நடராசா முதலி யோர். இதனுடைய சரியை, கிரியைப் பகுதிகளைப் பா ர் த் த ன ர். உதவியாக திரு. அண்ணாவி இராமு நடராசா, திரு. ம. சங்கரப்பிள்ளை, திரு. சு. கந்தையா, திரு. க. சந்திரசேகரம் போன்றோர் பங்கு கொண்டனர். கடைசி பூசகராகிய திரு. வேலுப்பிள்ளை க ண ப தி ப் பிள்ளை இறந்த பின் திரு.வ. நடராசா ஆசிரியருடன் திரு. ஆ. வல்லி புரத்தின் பிள்ளைகளும் திருமதி கணபதிப்பிள்ளை வள்ளி ய ம் மை யி ன் பிள்ளைகளும் சாசனப் பங்குடைமைகளுடன் ஒற்றுமையாக ஆலயத்தைப் பராமரிக்கின்றனர் கோவிற்கடவை ஆலய பூசகரே இ வ் வா ல ய க் கிரியைகளைச் செய்தார். திரு. வே. கணபதிப்பிள்ளையின் பின் பூசகர் களாக கோவிற்கடவை திரு. கா சிதம்பரநடராஜக் குருக்களுடைய, திரு. ஆ. கணேசசர்மாக் குருக்களுடைய தந்தையரும்தாமும் பார்த் தனர்.

## ஆலயமுன்னேற்றம்

1. 1982-ம் ஆண்டு திரு. ஆ. வ. தங்கராசா முகதாவில் சகலரும் இணைந்து புதிய கற்கோவில் கட்டி, சிலையமைத்துக் கும்பாஷேகம் முதன்முதல் நடைபெற்றது.
2. திரு. ச, உருத்திரானந்த சர்மா ஐயர், திரு. ஆ வ. தங்கராசா என்பவரால் முதலாக ஆலயப் பூசகராக மாதாந்த சம்பள முறைப்படிநியமிக்கப்பட்டார்.
3. திரு. அ. இ. நடராசா அவர்கள் இவ் வாலயக் கணக்கறிக்கைகளையும் ஆலய வேலைப்பாடுகளையும் உதவியாகக் கொண்டு நடாத்தி முடிவில் திரு. ஆ. வ. தங்கராசாவிடம் யாவையும் சமர்ப்பிப்பார்
4. அயல் காணிகளில் குடியேறிய மக்களும் வேறு அண்மையில் ஆலயம் இல்லாததால் மிகவும் பக்தியும் நன்கொடைகளும், காணிக்கைகளும் உபயங்களும், அன்பளிப்புகளும் கொடுத்து உயர்த்தினர். ஆலய வருமானம் அதிகரித்தது.
5. பக்திப்பனுவலாகத் திருவூஞ்சல் முதன் முதலாக அடிக்கப்பட்டது
6. இருநேரப் பூசைகள். கும்பாவிஷேக தினத்தன்று மாத்திரம் சுவாமி சுற்றுலா நடைபெறும்.
7. நன்கொடைகள் மூலம் மடப்பள்ளி களஞ்சியம் வெளிவீதிகள் அமைக்கப்பட்டன.
8. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுவழிபாடு நடைபெறும்
9. வருடாந்தம் கோவிற்கடவைச் சித்திவிநாயகர் மாசிமாத மகாசிவராத்திரியன்று மாலையில் வெண்பரி ஏறி இவ்வூரெல்லைக் காட்டாலயத்தில் (சாமியன் அரசடி ஞானவைரவர் ஆலயம்) மிருகயாத்திரை உற்சவம் நிகழ்வது பல்லாண்டு மரபு.
10. இவ்வாலய எல்லைகள் வடக்கு-பனங்காணிகள்

கிழக்கு — கிணறு உரிமையாளர்கள்
தெற்கு — பனங்காணிகள் பிரதான வீதி
மேற்கு — முடக்காடு ஒழுங்கை

தலவிருட்சம் — வேம்பு ஒதி
ஆலய அமைப்பு — 5 மண்டபங்கள், மணிக்கூடு
வேட்டை முன்றல் இரு சுற்று வீதிகள்
தீர்த்தக்கிணறு மடப்பள்ளி களஞ்சியம்
முதலியன.

## கவனிக்க வேண்டிய விடயங்கள்

1. திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மைக்கு ஆண்பிள்ளைகள் சந்ததி இல்லா இடத்தும் மருமக்கள் முன்னின்று முயலா விடத்தும் அடுத்த ஆட்சி சாட்சி சாதன உரிமையாளரான திரு. வ நடராசா ஆசிரியரும் திரு. ஆ. வல்லிபுரம் பிள்ளைகளான திரு. வ. நடராசா அதிபர், திரு. வ. தங்கராசா கல்வி வட்டாரப் பரிசோதகர் மேற்பார்வையிலே ஆலயம் என்றும் இவர்கள் அதிகார தோரணையில் நடாத்தப்படுகின்றது. ஆலய இறைமை உபகரணம் உடைமை நிலம் ஆண்டறிக்கைகள் கிரியா பாகம் யாவும் இவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

2. இடையில் 1985-ன் பின்பு திரு.ச. உருத்திரானந்த சர்மாவும் அ. இ. நடராசாவும் சகாக்களும் திரு. க. வள்ளியம்மையும் சில தவறுன வழியில் பிழைகளை விடுவதாகயான் அறிந்து இவ் விடப் வெளியிடுகிறேன். இவர்களால் ஆலயம் காலகதியில் செயலிழக்கலாம், கோவிற்கடவை மக்களையும் ஆலயப் பெருமையும் குன்றுவதை யான் சகிக்கமுடியாது.

3. இவ்வாலயம் கோவிற்கடவை சார்ந்த மக்கள் ஆலயம் 8-ம் திருவிழா உபயகாரருமாரும். உண்மைகள் உறங்கவைக்க முடியாது. பணத்தாலும் பிடிவாதத்தாலும் கூட்டுச் சேர்க்கைகளும் தோன்றி, நடத்திஞேம், ஆலயம் சிறக்க வேண்டும். ஒரு பங்காளரை ஒதுக்கிஞேம், என்றதால் பல பிழைகள் தொடர்கிறது நீங்கள் செய்த நன்மைகளும் மறைகின்றன. உதவியும் பங்கில்லாதவர்கள் மூலம் பெறலாம். நன்கொடையாளர்கள் பங்காளிகளல்ல.

4. இவ்வாலயம் எக்காரணம் கொண்டும் பெருப்பிக்கப்பிரமாணம் இல்லை காரணம்—கோவிற்கடவைப் பிள்ளையாரின் கையடங்கியது
மான் வேட்டைக் காட்டு ஆலயம்
ஊரெல்லைக் காவல் ஆலயம்
உற்சவ மூர்த்தியல்ல யோசியுங்கள்

தனிப்பட்ட பேய்களைக் கட்டும் ஆலயம் பெருமைக்கும் வருமான ஆசைக்குமுடைய இடமல்ல. போட்டிகளும் மமதைகளும் வேண்டாம்.

## திருத்தப்பட வேண்டியபிழைகள்--வேழமுக வடிகள்

1. பல்லாண்டுகளாக மரபுவழியில் நடாத்தியவர்களை உரிமை இல்லையென மறுத்தல்
2. அன்பாக வாழும் அயல் இனமக்களுக்கு உணர்வுகள் கொடுத்தல், போட்டியாக்கல்
3. வித்திட்ட சம்பளம் கொடுத்தவரை நல்லவருமானம் வர கூட்டு நடவடிக்கையால் செய்நன்றி கொன்றல்
4. அ. இ. நடாராசாவும் சகாக்களும் புதிய முறைகளை வகுக்க எண்ணல் 1990 கணக்குகள் வெளியிடாமை
5, திருவூஞ்சல்

   சிறப்பாகச் செய்ய வேண்டிய திருவூஞ்சல் புத்தகம் ஆணவத்தில் பாதிக்கப்பட்டது. யாரையும் ஆலோசியாமல் பல புத்தகங்கள் பாராமல், போட்டியால் அடிப்பித்த பிழை தனிப்பட்டவரைச் சார்ந்தது. ஒத்துக்கொள்ளாமல் நீண்டகாலம் சமாளிக்க முடியாது. இப் புத்தகம் ஆலயத்தை, ஆண்டவனை, சாசனத்தை, கற்றவர்களை கோவிற்கடவையைப் பாதிப்பதால் யான் இதில் கவனம் எடுத்தேன்.

ஆகையால் இவ்வூஞ்சல் இயற்றிய பண்டிதர் க. கணபதிப்பிள்ளை அவர்களை 2-4-91-ல் மாலை 5.00 மணியளவில் ஊஞ்சல் பாட்டுக்களின் கடசிவரியில் உள்ள பிழைபற்றிக் கூறினேன். காணியின் பெயர் கொடுபடவில்லை என்றார். சொல்திருத்தம் பற்றி அனுமதிகேட்டேன். உடனே உடன்பட்டார். அரசடி, அரசடிவாழ் என்ற சொற்கள் மாற்றி கதிரையிற்புலம் என்றபதம் மறுபதிப்பில் கொடுக்கலாம் என்றார். ஆகவே மறுபதிப்பு யான்விரைவில் செய்வேன். இவ்வூஞ்சல் ஆலய சம்பந்த மற்றதென யாவருக்கும் அறியத்தருகிறேன். மறு பதிப்பு வரும் வரை பக்திப்பாடலாகப் படிக்கலாம். இக் காப்பிலே ஆலய சரிதமும் இடம்பெறவில்லை

6. வளர்த்துக் காப்பாற்றிய தாய் மரபுவழி கோவிற்கடவைப் பிள்ளையாரை 3-6-91-ல் நடந்த குரு அபிஷேகத்தில் மதிக்கப்படவில்லை. குருப்பட்டமளிப்பு விழா அழைப்புமடலில், கிராமசபை எப்படிப் பிரிவுபட்டாலும் இடையில் கோவிற்கடவை துன்னாலை தெற்கு என்று சேராமல் போட்டிப் மனப்பான்மையால் நெல்லியடி கிழக்கு என்று காட்டிச் சாசனப் பிழை, கிராமப் பிழை, பெற்றார் உரிமைப்பிழை, வட்டாரப்பிழை போன்ற பிழைகளை விட்டதை எல்லோரும் கூறினார்கள் ஊரெல்லை துன்னாலைக்குரியது.

7. ஏதேச்சமாக ஆலயம் நடப்பதை யாரும் விடமாட்டார்கள் இன்னும் எத்தனை வெளிவருமோ அறியோம். சரிவரச் செய்யுங்கள் அல்லது கற்றோரை நாடுங்கள். கோவிற்கடவை சாமியன் அரசடி எங்கள் வரையறுவில் மட்டுப்படுத்தப்பட்டது. இப்படியான பிழைகளை விடவேண்டாம்.

## கோவிற்கடவைச் சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை

திரு. வீமன் சி. சின்னத்தம்பி காலம் தொட்டு திரு. ச. சுப்பையா ஆரம்ப காலம் வரை மணியகாரத்துவம் இருந்தது. பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் 12-12-75-ல் T. R. 67, T. R. 71 தீர்வையின் பிரகாரம் திரு. சங்கரப்பிள்ளை சுப்பையா பண்டிதரவர்கள் மனேஜர் தர்மகர்த்தாவாகவும் கட்டைவேலி கோவிற்பற்று துன்னாலை செகக்கொடிதேவன் குறிச்சியிறை காட்டுப்புலம் 12, 1/2 பரப்பில் மேவிய சித்திவிநாயகர் ஆலயம் பூங்கொல்லை இரண்டிற்கும் ஆணித்தர அதிகாரம் வழங்கப்பட்டது. திரு. விசுவர் பொன்னையா அவர்களுடன் வழக்காடி வெல்லப்பட்டது. கோவியம் எனும் விழுபொருளால் மக்கள் வழுக்குண்ட போது, ஒன்றுகூட்டிப் பணிகள் செய்யப் பரிபாலன சபையை முதன் முதல் 6-6-76-ல் ஏற்படுத்தினர். பண்டிதரவர்களின் யுக்தி நடவடிக்கைகளினால் மக்கள் அணிதிரண்டனர். அசாதரண காரணிகள் அரசியலுடன் புகுந்த ஆலயங்கள் அவலமடைந்த காலத்திலும் மக்கள் யாது தீமையும் அணுகா வண்ணம் காப்பாற்றினர். இதனால் சிலகுடிகள் பலம் பங்கு பக்குவ நிலைகளை இழந்தனர். மதுகுடிக்கப்போய் மதுரையில் குதிரை வாங்கும் நிலையான விளைவுகள்.

பரிபாலன சபை முதற்பொதுக்கூட்டம் 3-5-77-ல் நடைபெற்றது நிர்வாகம், நிறைவேற்றிய பணிகள் யாவும் கூட்டறிக்கை, ஆண்டறிக்கைகளில் காணலாம். கணக்கறிக்கைகளில் வரவு செலவு ஐந்தொகை, நன்கொடை விபரம், திட்டமிடல், குறிப்புகள் யாவும் அடங்கும். எக் காலமும் இப்பரிபாலன சபைக்கு யாப்புகள், சட்டங்கள் தேவையில்லை. இன ஒற்றுமையில் இயங்கும் ஒரே கொடிமக்கள், 350 குடிமக்களை விட்டு வேறுயாரும் ஆலயத்தில் பங்குகள் இல்லை. தற்பொழுது பரிபாலன சபை பல பணிகளைச் செய்து முன்னேறு வதைக் கண்ணுரக் காணலாம். ஆலயத்தில் பல நிகழ்ச்சிகளும் நடைபெறுவதைப் பார்க்கலாம். விளம்பரங்கள் வீடியோக்கள் மூலம் அறியலாம் எப்படிப்பட்ட பிணக்குகளும் ஒற்றுமை அணியில் தீர்ப்பது கண்டு யாவரும் பெருமகிழ்வடைகிறோம். எங்கும் புகழ் பரப்புகின்றது. கோவிற்கடவை ஆலய வேழமுகனின் திருவருளைப் போற்றுவோமாக.

# கோவிற்கடவை சனசமூக நிலையம்

எமது நூல் நிலையம் மேற்படி பெயருடன் 1-1-1977-ல் இளைஞர்களால் அரும்பாடுபட்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு முன் நடாத்தப்பட்ட நூல்நிலையங்கள் ஐக்கிய நாணய சங்கங்கள் நல்லமுறையில் இயங்கப்படவில்லை. இளைஞர்களே ஆலய முன்றலில் அழகுறச் சிறிதாகக் கட்டிடம் அமைத்தனர். 30 பேர் கொண்ட அங்கத்தவர் பணமும் நன்கொடை ரூ 25000/- மும் மூலதனமாக இரு அறைகள் உள்ளடக்கியது. நூல்நிலையக் கூரைபோடல் சீலிங் அடித்தல் முதலியன செய்வித்தவர். திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள். 1980-ல் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகம் நெல்லியடியில் J/JC/7/CC/466 எனும் நம்பரில் பதியப்பட்டு ரூ 600/- நன்கொடைப் பணமாக வருடா வருடம் பெறுகிறோம். 13-10-86-ல் யாழ் உள்நாட்டு உதவி ஆணையாளர் பிரிவு அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்டது. வெளிநாட்டு இளைஞர்கள் நன்கொடைப் பணமாக முதலீடு செய்து ரூ 35000/- 31-12-88-ல் இலங்கை வங்கியில் கையிருப்புகளாக காட்டப்படுகின்றது. 1989, 1990, 1991 இம் மூன்றாண்டுகளில் வங்கியால் கொடுக்பட்ட வட்டியிலிருந்தே வாசிகசாலைக்குப் பத்திரிகைகள் போடுகிறோம் பிரத்தியேக மின்சாரம் கணக்கறிக்கை ஏடுகள் விதிகள் யாவும் உண்டு. திரு. கே. ஞானப்பிரகாசம் அவர்களின் கைவன்மை மனோபலம் தொண்டுள்ளம் முதலிய முயற்ச்சியினால் அமைந்த ஆரம்ப நூல் நிலையமாகும். சந்தாப்பணம் வசூலித்தல் மீண்டும் ஆரம்பிக்கலாம்.

16-9-88-ல் புதிய கட்டிடம் ஆரம்பமாகியது இதன் பின் நூலக நிர்வாகம் மாறியது. தொடர்ந்து 1989, 1990 இரு ஆண்டுகளின் கணக்கறிக்கைகள் கிடைக்கவில்லை. வெளிநாடுகளுக்கும் அனுப்பவில்லை. புத்தகங்கள் சேர்த்து அங்கத்துவ முறைகொண்ட பரிமாறல் வாசிப்பு முறை 1991-ல் ஆரம்பமாகியது. இது ஒரு நல்ல செயலாக்கம், ஆனால் கிராமத்தில் அரசியல் சூழலால் யாதேனும் மேற்கொளமுடியாது.

## கோவிற்சந்தை

கோவிற்கடவை மாதர்களும் சென்று கூடிவியாபாரம் செய்யும் பொதுச் சந்தையாகும். இது பல்லாண்டு மரபு.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

## துன்னாலை வடக்கு புலோலி

"நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணாவெனும் நாமம்"

உக்கிரசிங்கன் ஆட்சி கி. பி. 785-ல் கதிரைமலையாகிய கந்த ரோடையில் நடைபெற்றது. திருவே உருவமான மனைவி மாருதப் பிரவாக வல்லிக்கு பாதுகாப்பு அரணாக மாற்றிய தலைநகர் சிங்கபுர மென்னும் வல்லிபுரமாம். இதுவே சிங்கை நகர் ஆகும். பருத்தித்துறை தொடங்கி சுண்டிக்குளம் வரை வெள்ளை மணற்றிடர் பரவலாய் உண்டு. இவ்விடம் கலிங்கை ஆரியர் இறங்கிய படியாலும், சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் இராசதானியாதலாலும் சிங்கபுரம் எனப் பெயர் கொண்டதும் வல்லிபுரமே. முற்பட்ட காலங்களில் தமிழ் நாகர்கள் குடியேறிய மணற்றி மணவை என்பதும் வல்லிபுரமே. கி. பி. 1-ம் நூற்றாண்டில் அநுராதபுரத்திலிந்து ஆண்ட சிங்கள வசபா மன்னன் வல்லிபுரத்தைக் கைப்பற்றினான் அதற்குச் சான்று வல்லிபுரத்துப் பொன்னேடு முதுமக் கட்டாழி பழைய காசுகள். 1936-ம் ஆண்டளவில் அந்நியர் படையெடுப்பால் மதமாற்றம், மாறிய அரசியல் சூழ்நிலைகளால் பழைய கட்டிட அத்திவாரத்தின் அழிபாடுகளிடையே ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டது. பிராமியில் எழுதப்பட்ட ஆதிசிங்கள மொழியில் சாசனத்தில் இடம்பெறும் படகர அதன எனும் நாமமும் வல்லிபுரமே. புலவர் ஜெகநாதனின் ஆய்வுக் கூற்றுக்கள் கற்றநூல் துணிபும் முடிபும் பெறவில்லை. செங்கை ஆழியான் அவர்களின் ஆய்வுக் கூற்றுகள் பல உண்மைகளை வெளியிடுகின்றன, வல்லிபுரத் தலபுராணம் ஆழ்கடலான் நுழைவாயில் கூற்றுக்கள் மற்றய பங்குடைமை மக்கள் மனம் வருத்துவதானவை, இதனால் ஏனையவை ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் வல்லிபுரச்சருக்கம் ஆலயச்சருக்கம் விழாவயர் சருக்கம் ஆராய வேண்டியவை. இலவல்லி நாச்சியார் மடியில் விழுந்த மீன் சக்கரமாக மாறி நிலத்தில் பிரதிஸ்டை செய்தால் போன்று அமைந்த இடம் வல்லிபுரமே. பிரபல்யம் வாய்ந்த விஷ்னு ஆலயங்களில் துன்னாலை வடக்கு புலோலி வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் ஒன்று, துன்னாலையையும் வல்லிபுரமும் ஆலயமும் பிரிக்கமுடியாத ஒரு குளிகையாகும். உண்மைக்குப் புறமான காரணங்களினால் வேறுபடுத்த முடியாது.

1. ஆலயம் சார்ந்த சாதனங்களை விட்டு (ஆலயத்தினுள்ளே பாதுகாப்கப்படும் சாசனங்கள்) மற்றெந்த ஆய்வும் பக்திப் பனுவல்

புராணங்கள் யாவும் சாட்சி ஆட்சிசாசனமாக எடுக்கப்படமாட்டாது ஆலயத்துக்குரியவையுமல்ல. ஏனெனில் அரசியல் சார்பும் தன் சார்பும் உடையனவாகலாம். வல்லிபுரத்துறை இப்பொழுதும் கப்பற்துறை யென்றேவழங்கப்படுகிறது.

2. வல்லிபுரக்குறிச்சி புலோலி வராத்துப்பளை கற்கோவளம் துன்னாலை ஆகிய கிராமங்களின் மத்தியில் இருக்கின்றது.

3. உபதபாலகம் துன்னாலை வடக்கு கரவெட்டிக்குரியதானாலும் சிறிது தூரமாகையால் தபால் விநோகித்தவர்கள் பிழையாக புலோலியில் தபாலக பட்டுவாடா செய்ததால் இது காரணமாக்கப் படாது.

4. இவ் வாலய வரலாறுகள், மாயவனின் மகிமைகள் ஆழ்வார் பதிகங்கள் அருட்பாடல்கள் திருவூஞ்சல் யாவும் திருக்குட முழுக்கு மலரிலும் தட்சண கைலாய மான்மியத்திலும், பத்திரிகைகளிலும் காட்டப்படுகின்றன.

5. மற்சவடிவு — கற்கோவளம்
மடியில் மீன் — இலவல்லி நாச்சியார் வராச்துப்பளை
சக்கரப் பிரதிஸ்டை — வல்லிபுரம் ஆலயம்
எழுந்தருளிய பகுதி — துன்னாலை வடக்கு புலோலி

6. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவம் பின்வரும் பங்குடைமை கொண்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | துன்னாலை சார்ந்த | மக்கள் | 8 | திருவிழாக்கள் |
| ஆ. | கற்கோவளம் | ,, | 3 | ,, |
| இ. | புலோலி | ,, | 3 | ,, |
| ஈ. | நெல்லியடி கரவெட்டி | ,, | 2 | ,, |
| உ. | (வராத்துப்பளை) தும்பளை | ,, | 1 | ,, |
| | | | 17 | ,, |

புலோலி நெல்லியடி விவாகத் தொடர்பாலும் திருவிழாக் கொடுப்பாலும் வந்த உறவாகும். பிரதம ஆலயக்குருக்கள் திரு. க. இராமச்சந்திரக்குருக்கள் துன்னாலை. திருவிழாக்கள் 1—6 மட்டும் அலங்காரமாகவும் உள்வீதி உலாவும், 7—17 வரையும் சரித்திரத் திருவிழாவும் வெளிவீதி உலாவும் ஆகும். திருவிழா, உபயகாரர் ஐந்தொழில்கள்

விசேட உற்சவதினங்கள் யாவும் ஆலய ஆண்டுப் பிரசுரப் பட்டியலில் காணலாம். இவ் வாலய மேற்கு எல்லை கோவிற்கடவை துன்னாலை மட்டும் பரந்திருக்கிறது.

இவ்வாலய பரிபாலன சரித்திரம் 1932-ம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ் வாண்டின் முன் துன்னாலையும் கற்கோவளமும் இணைந்து நடாத்தின. திருவிழாக் கொடுப்பனவுகளால், பண்பற்ற சிநேகிதர்களால் அதிகாரப்பரவலாக்கலால், ஆளும் தன்மையின்மையால் சிலசீர்கேடுகள் நடந்தும் போட்டிகள் வழக்குகள் வந்தன. 1938-ம் ஆண்டு பொதுக் கோவிலாகியது. திரு. மு. காசிநாதர் வழக்கைக் கைவிட்டதனால் திரு. ம. செல்லத்துரை திரு. ப. நாகலிங்கத்துடன் சேர்ந்து தீவிர முயற்ச்சியால் தோன்றிய நீதிமன்றத் தீர்ப்புபரிபாலன சபையை உருவாக்கியது.

இப்பரிபாலனசபை மகாசபை தர்மகர்த்தா சபை திருப்பணிச் சபை என மூன்று பாகமாக வரையறுக்கப்பட்ட நிர்வாக அங்கத்தவர்களுடன் திறம்பட நடைபெற்று வருகின்றது. நன்கொடையாளர்களை நிர்வாகத்தில் சேர்ப்பது முறையல்ல. திருவிழா பங்குடைமை அங்கத்தவர்களே சபையில் இருக்கவேண்டும். சபையும் அங்கத்தவர்களும் கூடினால் பல பிழைகள் வரலாம் ஆனல் கூட்டங்களுக்கு யாவரும் பங்கு கொண்டு ஆலோசனைகள் வழங்கலாம். தீர்வு எடுக்கலாம். பரிபாலன சபையின் நிர்வாக ஒழுங்கு, பணிகள் வரவு செலவுக் கணக்குகள் யாவும் ஆண்டறிக்கைகளில் காணலாம். இவ் வாலயத்துக்கென பிறம்பான தர்மசாதனங்கள் உண்டு. அவைகளை வரையறவு செய்யவேண்டும். திரு. ம. தாமோதரம்பிள்ளையின் மேற்பார்வையில் ஆலயம் சார்ந்த ஆருதார மண்டபங்கள் எழுந்தருளிகள் மடங்கள் கட்டப்பட்டன மற்றய பணிகள் பின் பரிபாலன சபையால் உருவாக்கப்பட்டன. குருக்கட்டு புலோலி திரு. நா. இராசா மேற்பார்வையில் இருந்தது. 1976-ம் ஆண்டின் முன் இவ்விரு ஆலயங்களின் ஆண்டு நிரை மேற்பார்வையாளர் பட்டியல்கள் இன்னும் வெளிவரவில்லை. மிகவும் முக்கியமானதாகும்.

1. மலர்களில் பிரசுரங்களில் நூல்களில் புலோலி அன்பர்கள் செய்த அரிய முயற்ச்சிகளைக் கூறியபடி துன்னாலை சார்ந்த மணியகாரப் பரம்பரையினர், நாட்டாண்மைச் செல்வர்கள், திரு. மா. கந்தசாமி திரு. கெங்காதரம், திரு. இ. அன்னலிங்கம் போன்ருேர் அரும்பாடுபட்டு நல்ல நிர்வாகமுறை ஆலய நிலஉடைமை, இறைமை பேணல், கணக்காய்வுகள் செய்தமை முதலிய சேவைகளையும் பாராட்டி எழுதவேண்டும்.

2. புலோலி துன்னாலை கற்கோவளம் பிரிவு மனப்பான்மைகள் கைவிடவேண்டும். ஒற்றுமை விட்டுக்கொடுத்தல் உண்மையாதல் முதலிய உயரிய பண்புகள் நாடவேண்டும்.

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அனுசரிக்க வேண்டிய திருமுறைகள்

அ. பன்னிரு திருமுறைகள் — பஞ்சபுராணம்
ஆ. தட்சணகைலாய மான்மியம், திருவூஞ்சல், அம்மானை
இ. பாரதம், ஏடுவாசித்தல் பஜனை நாமாவளி
ஈ. பன்னிரு ஆழ்வார் பிரபந்தங்கள் அந்தாதிகள்
உ. ஆண்டாள் பதிகம், நாச்சியார் திருமொழி
ஊ. திருப்பாவை திருவெம்பாவை சுப்பிரபாதம்
எ. ஏகாதசிபுராணம், விஸ்ணுபுராணம் பகவத்கீதை

ஏனைய தனிப்பட்ட பக்திமேல் பாடப்பட்ட பனுவல்கள், ஆய்வுகள் புராணங்கள் யாவும் ஆலயத்துக்கு அப்பாற்பட்ட மக்கள் அறிவுடைமைப் பொருட்களாகும்-

தூய உள்ளத்துடன் வெளிப்படையாக செயல்படவேண்டும். இதுவே கற்றவர்க்கழகு. உண்மைகள் ஒரு போதும் உறங்குவதில்லை. பேச்சிலும் அச்சிலும் ஒற்றுமை உண்மைபகுந்துணர்தல் வேண்டும். ஆதீனம் பராம்பரியம் ஸ்தாபித்தல் ஆதிக்கம் பராமரிப்பு ஆட்சி போன்றவையை மறைக்கமுடியாது. துன்னாலை கற்கோவளம் புலோலியாவும் இணைந்து ஆற்றிய பணிகளாகவே போற்றவேண்டும் கோவிற்கடவையும் விளிபுற்றுக் கொண்டேயிருக்கும்.

பல பணிகள் புரிந்து மேலோங்கி இராசகோபுர வனப்புடன் ஆலயம் பொலிவதைக் கண்டு யாவரும் மகிழ்கிறோம். சிறந்த பரிபாலனசபை சீரியதொண்டுகள் பாரிய வருமானம் பக்தியுடை மக்கள் யாவும் மாயவன் மாயமே. கோகுலம் வாழ்க கடற்றொழில் வளர்க நானிலம் வாழ்க, மிளிர்க சக்கராயுதம்,

குறிப்பு:-

1. கோவிற்கடவை இயற்றுத, ஆழ்வார் பிரபந்தம் திருமுறை முதலியவற்றிலிருந்து, நல்ல பஜனைமலர், யாவரும் கைநூலாக வைத்திருக்க, ஆலயத்தில் தொடர்ந்து படிக்க, அச்சிட முன்வந்துள்ளோம்.

2. வேறு ஆய்வு நூல்கள் என்கையில் கிடைக்கவில்லை.
3. திருவூஞ்சல் ஆராயவேண்டும். ஆலயபீடம் அமைந்த பூமிப்பெயர் ஊஞ்சல் கடைசி அடியில் வருகிறதா இல்லையா? அல்லது பக்திப் பனுவலா?

★ ★ ★ ★ ★ ★

பழம்பெருமை வாய்ந்த துன்னாலைக் கோவிற் கடவைப் பிள்ளையார் கோவில்

ED

விளம்பரம் அளித்தவர் திரு. ஆ.வ. தங்கராசா B.A. Dip-in C.E.O.

வீரகேசரி ஈழநாடு 29-1-70

முக்கிய அம்சங்கள்

1. 8–ம் நூற்றாண்டில் கலிங்கதேச அரசன் உக்கிரம சிங்கன் கந்த ரோடை கவர்ந்து நாகதீப அரசனுகி சோழக்குமாரி மாருதப் புரவீக வல்லியை மணந்து அநாதி பெயருடைய கோவிற்கடவை எனும் மாவிட்டபுரக் கந்தசாமி கோவிலைக் கட்டுவித்தான். சில காலம் துன்னாலை அணித்தாயுள்ள சிங்கை நகரில் இராசதானி அமைத்தான். இவ்விடம் வல்லிபுரம் ஆகும்.

2. இக்கிராம பிரபல சுதேச வைத்தியரும் துன்னாலை தெற்கு சாமியன் அரசடி ஞானவைரவர் கோயிலைக் கட்டியவருமான திரு. அம்பலவர் ஆழ்வாப்பிள்ளை (பூசாரி அப்பா) இவ் ஆலய வரலாற்றினைக் கூறக்கேட்டிருக்கிறேன் என்றார். உணர்ச்சி ததும்பிய ஆலய வரலாறு.

3. இவரது தகப்பனார் சிங்கப்பூர் வல்லிபுரம் எனும் சிறப்பு நாமம் கொண்ட திரு. ஆழ்வாப்பிள்ளை வல்லிபுரம், மணியம் திரு. சின்னையா சின்னத்தம்பியுடன் பல மண்டபங்களைக் கட்டி குதிரை அன்பளிப்பு முதலியன செய்தார்.

4. மாவிட்டபுர செகராசசேகர முதலியுடன் தெல்லிப்பளை மல்லாக மக்கள் இங்கே குடியேறினர்.

5. மகோற்சவ மகா சிவராத்திரியன்று பிள்ளையார் சாமியன் அரசடி வைரவர் ஆலயத்தில் மிருகயாத்திரை வேட்டையாடல் வருடா வருடம் நடைபெறவேண்டு மென்ற நியதியை ஆலயமணியமுடன் ஏற்படுத்தியவர் திரு. ஆழ்வாப்பிள்ளை வல்லிபுரம் (சிங்கப்பூர்)

6. காசிநாத வித்தியாலய அதிபர் வ. நடராசவும், இவரின் பிள்ளைகளுமே வேட்டையாடல் ஒழுங்குகளைச் செய்தல் பல்லாண்டு மரபு.

7. பண்டிதர் இ. சின்னையா, வ. மார்க்கண்டு ஆகியோரின் முயற்சியால் ஆலயத் திருமடமும் ஐக்கிய சங்கமும் உருவாக்கப்பட்டன.

8. உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம், உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாச ஆகியோர் முதலாக ஆலய மின்சாரத் திறப்பு விழாவிற்கு 30-1-70-ல் சமூகமளித்தார்கள்.

9. புனருத்தாரணமகா கும்பாவிஷேகம் கரவை சாமியன் அரசடி ஞானவைரவர் கோயில் 13-9-82-ல் நடைபெற்றது. இதில் கரவை, கரவெட்டி எனும் பதியில், எனும் சொற்கள் தவறுதலாக அடிக்கப்பட்டுள்ளன. இனிமேல் ஊரெல்லை துன்னாலை தெற்குப் போட்டே கிராம சபைப் பிரிவு வட்டாரப் பெயரிட வேண்டும். ஏனெனில் கள்ளியடி (சாமியன் அரசடி) ஊரெல்லை கோவிற்கடவைக்கும் துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கும் சொந்தமானவை ஒரே பாலத் தொடர்பாம் என்பது பல்லாண்டு குடியேற்ற மரபு.

## எமது நூலுக்கு ஆராயப்பட்ட சாதனங்கள்

1. நீதிமன்ற தீர்ப்பு
2. கர்ணபரம்பரைக் கதை
3. இடப்பெயர் ஆய்வு
4. யாழ் தமிழ் அரசர் வரலாறு
5. நல்லூர் ஆலய வரலாறு
6. வல்லிபுர ஆலயகுடமுழுக்கு மலர்
7. வல்லிபுரத் தல புராணம்
8. ஆண்டறிக்கைகள்
9. திருவூஞ்சல்
10. பிரசுரங்கள், தந்தையாரின் குறிப்புக்கள்.

# யார் இந்த தவதாமோதரம்?

கோவிற்கடவையில் முதன்முதல் செல்வரும், 18–ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிறந்தவரும், மலேசியா சென்று உழைத்தவரும் கிராமியத் தர்மவாதியும் அரசியல் உதவியாளரும், கிராமசபை அங்கத்தவருமாகிய காலஞ்சென்ற திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம் பிள்ளையின் மகனுகிய திரு. தா. தவசிங்கம் என்பவராவர். எனது தந்தையார் தனது தமையனுர் திரு ஆ வல்லிபுரம், மாமன் நவிண்டில் முருகேசு, துன்னுலை திரு. வ நல்லையா இவர்களுடன் முதன் முதல் சிங்கப்பூர் மலேசியா சென்றவர். இவரது உத்தம நண்பர்கள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், மாணிக்கவாசகர், தர்மகுலசிங்கம், நா. இராசா, பாங் லோகநாதன், மதியாபரணம், புலோலிபண்டிதர்கள், வதிரிசெல்லையா (பள்ளிக்கூடம்) கிட்டங்கி துரைச்சாமி, இராமலிங்கம் உடுப்பிட்டி, கரவெட்டி உடையார்கள், போஸ்ற்மாஸ்டர் சிற்றம்பலம், வழக்கறிஞர்கள் இன்னும்பல இவர் தனது தந்தை தாயின் ஆசீர்வாதத்துடன் தன்னையே அர்ப்பணித்த விநாயக வைராக்கிய மொட்டையடித்த ஏழைப்பெண் வைரவிப்பிள்ளை தெய்வானைப் பிள்ளையை மணந்தார். இவரைப் படிப்பித்த தமையனுர் திரு. க. வேலுப்பிள்ளை என்பவருக்கே நன்றியாக முதுசங்களை எழுதியும் பல உதவிகள் புரிந்தார். பின்பு கோலாலம்பூர் சென்று லண்டன் மற்றிக்குலேசன், வர்த்தகக்கல்வி, முதலியனகற்று சித்திகள் அடைந்து பினுங்மா நகரசபையில் உயர் தலைமைக்குமாஸ்தாவாகக் கடமையாற்றினர். இவர் உழைத்த காலத்தில் குதிரை வண்டிகளும், குத்துவீரச் செயல்கள், உத்தியோக உதவிகள், கல்விப்பணிகள் அந்நாட்டில் எண்ணிலடங்கா தனது மருமகன் திரு. சு. செல்லையாவையும் ஆளாக்கினுர். மனைவியுடன் மலேசியாவில் இல்லறம் அன்பாக நடாத்தினுர்.

எனது தந்தை இரண்டாம் உலகப்போருடன் இலங்கை திரும்பினுர். பிள்ளைகள் பிறந்தனர். தாயும் எனது ஏழாவது வயதில் பரலோகம் அடைந்தார். இவரது உடன்பிறந்த சகோதரங்களின் வலையில் சிக்கினுர். ஊர்மயமானுர். பிள்ளைகள் தனியவே வளர்த்தெடுத்தார். தாயில்லாமல் பல கஷ்டங்களை அனுபவித்தோம் எங்கள் தாயினமே தாங்கி வளர்த்தன. தந்தையினம்அவரின் உதவிகளுக்கு அன்புகாட்டின. தந்தையால் உதவி பெற்றவர்கள், யாரும் எங்களுக்கு நல்வழிகள் காட்டவில்லை, காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றனர். தாய்வழியினர் விவசாயிகள் திறமானவர்கள் இல்லை. அவர்

களில் சரிபிழைகள் இருப்பினும் மிக நன்றியுடையோர். இளையமாமி யின்ஆண்மக்கள். எனது சிறியதாயின் மகன் திரு. ஐ. செல்லையா அவர்கள் மிக அன்பும் பாசமும்உண்டு. ஆனல் வாழ்வில் [illegible], எனது பெரியம்மாவின் அக்காவையும் அத்தானும் தான் (திரு. சி. கந்தையா) அன்றும் இன்றும் என்றும் தாயைப்போல் பல ஆதரவு நல்கிறுர்கள். நான் கார் அச்சிடன்ட் பட்டகாலத்தில் பேணிப்பாத்தவர் அத்தான் திரு. சி. கந்தையா அவர்கள். தருணத்தில் திரு. இ. வீரவாகு திரு. இ. குமாரசுவாமி அத்தானும் எங்களை விடமாட்டார்கள். மற்ற வர்கள் நன்றிக்கடனுக உள்ளனர். அவரவர் ஆன்மவினை கன்மவினை பிராத்த வினைகளுக்கேற்ப வாழ் நாட்களில் அனுபவிக்கின்றனர். சிலர் நல்லாக இருக்கிறுர்கள்,

எனது தந்தையார் மிக ஆர்வமுடன் பிள்ளைகளைப் படிப்பித்தார். யான் அவரின் கிட்லர் தண்டனையால் படிப்பில் ஆசை ஏற்பட்டு தொடர்ந்து படித்தேன். கிரககோளாறுகளால் சாணேற முழம் சறுக் கியும் கைவிடவில்லை. எனது தங்கை மிகவும் கெட்டிக்காரி, ஆனல் எங்கள் மூத்தமாமி சமைக்கமுடியாதென்று மறுக்கத் தந்தையார் நிற்பாட்டினுர். ஆகையால் அவ 5–ம் வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. எனது தந்தையார் தனது சகோதரங்கள் [illegible] சொற்கள் மாயமாய்க் கேட்பதனுல் பிள்ளைகள் உயர்பள்ளிகளில் விடவில்லை. இனமயம் மயக்கிவிட்டது. பின்பு இரு மலர்களாகிய யாம் தந்தை யாரின் விருப்பப்படி ஆலோசித்து ஆசிர்வாதமுடன் விவாகங்கள் செய்யப்பெற்றும் கற்குளு கரையில் வயல் வெள்ளத்தில் தத்தளித் தோம். யான் தந்தையின் துணிவு பொறுதி சிக்கனம் கல்வியறிவு அனுபவ ஞானத்தைப் பாவித்து இருவரும் 1991–ல் தான் வெள்ளம் வற்ற உயிர்பெற்றேம். 20 வருடக் கடும்புயல் வீசின இதுநிற்க.

எனது தந்தையின் சேவைகள்பின் வருமாறு .

1. ஆலயத் தொண்டு, கிராமத் தொண்டு, ஆங்கில போதனுகல்வி
2. உயர்கல்வி வசதியளித்தல் திருமணநிறை வேற்றல், இணக்க சபை விடயம்
3. கூட்டுறவுச் சங்கம், பாடசாலை நிறுவ வசதியளித்தல்
4. ஏழைக் குடும்பங்களை உயர்த்தல்
5. பலகாணிகளை வாங்கி பிள்ளைகளுக்கு உதவி செய்தார். சுரண்டல் ஆரம்பமாக வழக்குகள் தொடர்ந்தன. சுழியோடாமல் துணை

நின்ற வருடன் வழக்குப்பேசி முதல்தீர்வில் தோற்ருர். பொய் சாட்சி, வராதசாட்சிகளையும் நான் பாடம் படித்தேன்

6. அல்லைப்பதி முருகன் மக்களைக் கோவிற்கடவை மக்களுடன் ஒற்றுமைப்பாலம் அமைத்தார்
7. பிறமாவட்ட மக்களை உருவாக்கினுர்—சான்றுகள் உண்டு
8. குறுகிய வருவாயில் கடனற்ற தியாகவாழ்வு பிள்ளைகளைக் கண்ணின் மணிபோலக் காப்பாற்றினுர்
9. தன்மகனுக்கு உரிய காலத்தில் பலதுறைக்கல்விகளைக் கொடுத்தார்

எனது தந்தையார் மரணச்சனி தொடக்க எனக்குக் கூறியே 9 நாட்கள் கடும் சுரமதனில் 1976—ல் தைமாதம் 6—ம் தேதி சிவபத மடைந்தார். திரு. ஆ. வ. நடராசா, திரு. ஆ வ. தங்கராசா, திரு. இ. சின்னையா அவர்கள் தந்தையுடன் அன்பாகவும், எனக்கும் கல்வி, தொழில்வாய்ப்பில் அக்கறை காட்டினர். திரு. சி. இராம நாதர், பிள்ளைகள் அன்பும் ஆதரவும் உள்ளவர்கள். ஏனையோர் தந்தை பெயரால் அன்பாய்ப் பழகுவர். துன்னுலை மக்கள் குடும்ப நண்பர் என்றும் பண்பாக நடக்கிருர்கள்.

அவர்பெற்றெடுத்த நல்வினைப்பயனே மூத்தமகன் தவசிங்கமாவார். காக்காய் வலியுடன் பிள்ளையார் சந்நிதியில் விடப்பட்ட செல்வம். இத்தவமே உரிய கல்விபயின்று பட்டதாரியில்லாட்டாலும் பலகலைகளையும் ஆர்வமுடன் கற்று கம்பனியில் உயர் உத்தியோகம் பார்த்து குடும்பவாழ்வில் படிப்படியாக அனுபவித்து பொன் பொருள் போகமதனில் தனது 50—வது வயதில் திருப்தியடைந்தார்.

பள்ளிக் காலம் வணதிரு அல்பிரட் பென்சமின் திரு இருதயக் கல்லூரி கரவெட்டி அதிபரான காலத்தில் அவரது போதனையில் கட்டுப்பாட்டில் படித்தும் மாணவர் தலைவராகவும், பாடசாலைக்கு உயர் பிரிவெக்ற் ஆகவும், றில் மாஸ்ராகவும், பேச்சுப் போட்டிகள் கூட்டங்களில் எதிர் வாதியாகவும், தலைவர் ஆகவும், விளையாட்டு சிவத்த இல்லம் (இம்மானுவேல்) தலைவராகவும் பலபங்குகள் பதவிகள் அடைந்தேன். தகப்பனுரின் தூண்டுதலால் ஆசையுடன் ஆங்கில ஆசிரியக் கல்வி, பண்டித வகுப்பு, மொழிக்கல்வி, வர்த்தகம், கணக்கியல்கல்வி போலிரெக்னிக் கொழும்பில் படித்து பல சான்றிதல்கள்

பெற்றேன். துன்னாலை திரு. வ. திருநாவுக்கரசு அவர்களால் பயிற்சிப் பரிசோதகராக 5 ஆண்டுகள் லோறி முத்துக்கிருஸ்ணா அன் கொம் பனியில் பயின்றேன். ஆனைக்கோட்டை திரு. S. சுப்பிரமணியம் மூலம் மகாராஜா சமாஜத்தில் பரிசோதகராக 5 ஆண்டுகள் வேலைசெய்தேன் பின் மல்லாகம் திரு. ம. கிருஸ்ணசாமியும், எனது நண்பன், சகஊழியர் ஆனைக்கோட்டை திரு. துரையப்பா ஸ்ரீ காந்தா மூலம் அனுபவம் கல்வித் தகைமையால் சுலபமாக மீண்டும் பயிற்சி பரிசோதகராக வோட்ஸ்ரேட்ஸ் தோன்ரன் அன் கொம்பனியில் சேர்ந்தேன். ஊக்கமாய் வேலைகளைப் படித்து நற்பண்பாய் பழகி அவர்களைத் திருப்திப்படுத்தி நாவன்மை கைவன்மை மொழிவன்மை அதிகார முடைமை முதலியன கொண்டு விரைவில் உயர்ச்சிகள் பெற்றேன் பின்வரும் ஸ்தாபனங்களின் வேலைகளில் எனது திறமைகளைப் காட்டினேன்.

1. வங்கிகள், கூட்டுறவு சமாஜம், பெரிய மொத்த வியாபாரக் கொம்பனிகள், ஏற்றுமதி இறக்குமதி ஸ்தாபனங்கள், விமான சேவைக் கொம்பனிகள், தோவலங்கள் கோட்டல்கள், வெளி நாடு ஸ்தாபனங்கள், இன்சுரன்ஸ் கொம்பனிகள் உற்பத்திப் பொருள்சாலைகள் பத்திரிகைக் கொம்பனிகள், தேயிலை றப்பர் தென்னை பெருந்தோட்ட அரச ஸ்தாபனங்கள் முதலியன.
2. இலங்கை முழுவதும் கம்பனிக்காசில் உலாவினேன். பலரோடு பழகினேன் அளவுடன் பல உணவுவகை குடிவகை விடுதிகள் நன்றாக அனுபவித்தேன்.
3. நல்லவை புரிந்தேன் உழைத்தேன் மனிதனானேன். 20 ஆண்டுகள் சேவை புரிந்தேன்.
4. 1/4 பங்கு தொண்டுகளில் செலவழித்தேன் கல்விகொடுத்தேன்
5. ஆலயம் நூலகம் முதலியன தொடர்ந்து கவனிக்கிறேன்
6. உத்தியோக வாய்ப்புக்கள் உயர்வுகள் அளித்தேன்
7. பயின்றவர்கள் பதவியில் இருப்பதைக் கண்டு குளிர்ச்சியடைந்தேன்.

பிள்ளைகள் இல்லாவிடத்து பிள்ளைகள் வளரச் சுகமடைந்தேன் பிள்ளையார் ஆட்கொள்வதையும் உணர்ந்தேன். சலரோகம் வாத வாய்வு காரணமாக உத்தியோகம் 54 வது வயதில் ராஜினாமாச் செய்தேன். கோவிற்கடவைப் பிள்ளையாருக்கு அடியவனாகி சிவசின்னங் களுடன் முதன்முதல் புராண படன உரை பஜனை சொற்பொழிவு முதலியன செய்கின்றேன் பொழுது போக்கு நூல்கள் வெளியிடுதல் புராணம் படித்தல் ஆகியன. உழைப்பும் குடும்பமும் குறைவில்லாமல் போகின்றது. போதும் என்ற மனம் தீய சிந்தையில்லாது ஆனந்தமலாபப்பக்குவம் அடைகிறேன். கற்றவர்களுடனும் செல்வர்களுடனும் பழகி பல அனுபவம் பெற்றேன்.

''பெற்றதார் பெறுவார் உலகில்''

''ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன் அடியேனே''

## நன்றி நவிலல்

1. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகன் சான்றோன் எனக்கேட்ட காலஞ்சென்ற பிள்ளையார் திருவடிகள் நாடிய, கல்லெறிந்து பெற்றதாய் மங்கல சொரூபி வை. தெய்வானைப்பிள்ளைக்கும், பல காலம் பிள்ளைகள் இன்றி தாய் எனக்கு ஏழுவயதில் மடியத் தாய் தந்தையாகவும், ஆலயத்தொண்டே வாழ்வாகவும் கிராமமே போற்றும் தர்மத்தேவதையாகவும் உடைய உயர் திரு க. தாமோதரம்பிள்ளை யவர்களின் பாதங்களை வணங்கி வாழ்ந்த முதற் கண்ட தெய்வத்துக்கும்.

2. உயர்கல்வி ஊக்குவித்த உத்தம பூங்கோதை அக்கா திருமதி செல்லையா செல்லம்மா கொள்வனி யவர்கட்கும்.

3. புராணப்படன உரை இடைவெளி நிரப்பிய தந்தைவழி மைத்துணர் திரு. இராமுவீரவாகு கனிஷ்ட அதிபருக்கும்.

4. வெளிநாட்டுச் செலவாணிகள் எனது பிரசுரப்படி அனுப்பிய ஆலயம் சார்ந்த இளைஞர்கட்கும், பரிபாலன சபைக்கும்.

வேழமுகன் திருவடிக் கமலங்களில் எனது சென்னி தீண்டுற, இனிதே முடிய, எல்லையில்லா இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக. பதினாறு சீரும் பெற்று கோவிற்கடவை பல்லாண்டு வாழ்க.

இப்படிக்கு

த. தவசிங்கம்

